# இலக்கியங்களில் திருக்குறள் உணர்த்தும் மனிதநேயமும் மருத்துவமும்

பொ.வீரசித்திவிநாயகன்
மனிதவளமாண்புத்துறை, என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி.

## முன்னுரை:

மனிதசமுதாயம் நாகரீகத்தின் உச்சம் தொட்டபோதுமனிதநேயம், ஆன்மிகம், ஒழுக்கம் இவற்றில் சிறந்தவிளங்கினார்கள். ஆனால் மனிதனைமனிதன் மதிக்காது சுய நலம், பொறாமை, வஞ்சம், போர்க் குணம் போன்றகுணங்களால் மனிதனைமனிதன் அழித்துக் கொள்ளும் நிலைஏற்பட்டது. இயற்கையில் ஒன்றைஒன்றுசார்ந்துவாழும் உயிரினங்கள் கூட பிறஉயிரினங்களை அழித்தாலும் பசித் தேவைபோகவேறு எந்த உயிரினங்களையும் கூட்டம் கூட்டமாக கொலைசெய்வது இல்லை. மனிதசமுதாயத்தில் மட்டுமே இந்நிலைஉள்ளது. இந்நிலையைப் போக்கவேஅறிவில் முழுமைபெற்றஞானிகள் தவத்தின் மூலம் தான் உள்ளுணர்ந்தஞானக் கருத்துக்களைதான் வாழும் காலத்தில் வழிகாட்டியும் மேலும் நூல்கள் வடிவிலும் விட்டுச் சென்றுள்ளனர். எனது இவ்வாய்வுக் கட்டுரையில் திருக்குறளில் மருத்துவமும் மனிதநேயமும் எவ்வாறுஎடுத்து இயம்பப்பட்டுள்ளது என்பதுகுறித்ததாகும்.

மனிதனைநெறிப்படுத்தும் ஒழுக்கம், கடமை,ஈகை போன்றவாழ்க்கை நெறிமுறைகளை நம் முன்னோர்கள் வகுத்துக் கொடுத்துள்ளனர். தான், குடும்பம்,சுற்றம்,ஊர் மற்றும் உலகுஎன அனைவருக்கும் உரியகடமையை நேரடியாகவே மறைமுகமாகவேநாம் செய்ய வேண்டியது முக்கியமாகும்.

## கடமை

**கடன்என்பநல்லவைஎல்லாம் கடன் அறிந்து**
**சான்றாண்மைமேற்கொள் பவர்க்கு.**
(குறள் எண்:981)

ஏனெனில் எந்தவொருதனிமனிதனும் இப்பூமியில் தனக்குத தேவையானஅனைத்துப் பொருட்களையும் தானேஉற்பத்திசெய்வதில்லை. விவாசாயிகளின் உதவிதேவைப்படுகிறது. இதுபோல் மருத்துவர், பொறியாளர், ஆசிரியர்,ஆட்சியாளர் போன்ற அனைவரது உடலாற்றல் மற்றும் அறிவாற்றல் மூலமே இவ்வுலகில் அனைத்துப் பொருட்களையும் உற்பத்திசெய்யமுடியும். இக்குறள் வழி உணர்த்தும் கடமைஉணர்வால் மனிதனைமனிதன் மதிக்கும் மாண்புஓங்கும் மற்றும் கடனைதிருப்பித் தரும் உணர்வேகடமைஉணர்வுஎன்றவிளக்கத்தின் மூலம் சமூகமுன்னேற்றம் அடையும் மேலும் நாடும் வளமடையும்.

## ஒழுக்கம்

**ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்.** (குறள்எண்131)

மேலும் மனிதசமுதாயத்தில் ஒழுக்கத்தின் பங்கும் தலையாயதுஆகும். ஒழுக்கத்தில் இருந்துவழுவுவதாலேயேமனிதன் நெறிகெட்டுபுலன் இன்பத்திலும் பொருள் மயக்கத்திலும் நெறிபிறழ்ந்துபஞ்சமாபாதகமானகொலை,களவு, சூது,மானபங்கம்,பொய் போன்றகுற்றங்கள் சமுதாயத்தில் பெருகிக் கொண்டேபோகிறது. எனவேஒழுக்கத்தின் சிறப்பைகுறள் வழி வழியுறுத்துவதின் மூலம் ஒழுக்கத்தின் மாண்பை இவ்வுலகுஅறியச் செய்கிறார் வள்ளுவர். இந்நெறியின் மூலமேமனமானதுபண்படுகிறது. பண்பட்டமனதிலேயேமனிதநேயமானதுபிறக்கிறது.

**ஈகை**

**அற்றார் அழிபசிதீர்த்தல் அ∴தொருவன்**
**பெற்றான் பொருள்வைப் புழி.**
(குறள் எண் 226)

பொருள் இல்லாஏழையின் கொடும் பசியைப் போக்க வேண்டும். அச்செயலேதான் தேடியபொருளைச் சேமித்துவைக்கும் வழி ஆகும் என்கிறார் வள்ளுவர். வள்ளலாரும் ஞானத்தைக் கொடுக்கும் முயற்சியில் சற்றுபின் வாங்கிஏழையின் பசிப் பிணியைப்போக்கவில்லை என்றால் ஞானம் சித்திக்காதுஎன்பதைஉணர்ந்தார். "கடைவிரித்தேன் கொள்வரில்லைகட்டுக் கொண்டேன்" என்றார். ஆகையால் வடலூரில் சத்திய தர்மசாலையை நிறுவினார். அன்று பற்றவைத்த நெருப்பு இன்றும் அணையாமல் ஏழையின் பசித் தீயை அணைத்து வருகிறது. சிறந்ததொரு இவ்வறச் செயலின் மூலம் வள்ளலார் உணர்த்தும மனிதநேயத்தை அனைருவம் போற்றுவர்.

**கொல்லாமை:**

**கொல்லான் புலாலைமறுத்தானைக் கைகூப்பி**
**எல்லாஉயிரும் தொழும்.** (குறள்எண்:260)

எந்தவொருஉயிரையும் கொல்லாதுமேலும் அதைஉண்ணாதுஉயிரைபோற்றும் குணம் உள்ளவரைஅனைத்துஉயிரும் தொழும் என்கிறார் வள்ளுவர். அவ்வுயிரைக் கொல்லும் போதுஅவ்வுயிர் படும் துன்பம் சாபமாகஉடல் செல்களில் பதிந்துஅவ்வுயிரைஉண்ணும் மனிதனதுகருமையம் களங்கமடைகிறதுஎன்கிறார் வேதாத்திரிமகரிஷி. வள்ளுவர் கூற்றுப்படிபுலால் உண்ணாதவன் கடவுளுக்குச் சமம் என்கிறார். எல்லாஉயிராலும் தொழப்படக் கூடியஒன்றுதான் கடவுள். புலாலைமறுத்தவனும் எல்லாஉயிராலும் வணங்கப்படுவதாக கூறுகிறார் வள்ளுவர்.

**தவம்**

**உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை**
**அற்றேதவத்திற் குரு.** (குறள் எண் : 261)

தனக்கு நேர்ந்த நோயை பொருத்துக் கொள்ளுதலும் பிறர் துன்பம் போக்குதலும் தவத்திற்கு உரியவடிவமாகும் என்கிறார் வள்ளுவர். வேதாத்திரிமகரிஷி அவர்களும் இக்கருத்தைவலியுறுத்துகிறார். ஒருவர் தவம் செய்தபிறகுகீழ்க்கண்டவாக்கியத்தைமனதால் உணர்ந்துசொல்லிக் கொள்ளவேண்டும் என்கிறார்.

**நான் எனதுவாழ்நாளில் யாருடைய உடலுக்கும் மனதிற்கும் துன்பம் தரமாட்டேன்**
**துன்பப் படும் உயிர்களுக்குஎன்னால் முடிந்த உதவிகளையே செய்வேன் என்கிறார்.**

-வேதாத்திரிமகரிஷி.

**மருத்துவம்:**

**நோய்நாடிநோய்முதல் நாடிஅதுதணிக்கும்**
**வாய்நாடிவாய்ப்பச் செயல்.** (குறள்எண்: 948)

நோய் இன்னதென்றுஆராய்ந்து,அதன் காரணத்தை ஆராய்ந்து, அதைதணிக்கும் வழியை ஆராய்ந்து மருத்துவம் செய்யவது ஒருவைத்தியரின் கடமையாகும் என்கிறார் வள்ளுவர். சித்தர்கள் ஞானத்தின் வழிகாட்டியகவிளங்கிஞானத்தையும் அந்தஞானத்தை பெறத்தகுதியுடைய ஆரோக்கியமான உடலைபராமரிக்கும் மருத்துவ ஞானத்தையும் பாடல்கள் மூலம் வழங்கிச் சென்றுள்ளனர். நாடிசாஸ்திரம் மூலம் மனிதஉடலில் நாடிஓட்டத்தைகணிப்பதின் மூலம் வாதம், பித்தம் மற்றும் கபநாடிகளின் மாத்திரை அளவானவாதநாடி ஒருமாத்திரை, பித்தநாடி அரைமாத்திரை, கபநாடிகால் மாத்திரைஎன்கிற அளவில் ஒடும் போதுதான் மனிதன்